செ.வெ.எண்:60 நாள்:26.07.2018

# பத்திரிக்கைச் செய்தி

## பொது மக்கள் தங்களுக்கு தேவையான 20 வருவாய்துறை சான்றிதழ்களை தாங்களே இணையதளத்தில் விண்ணப்பிக்கும் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

## மாவட்டஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.பிரபாகர்,இ.ஆ.ப., தகவல்

ஈரோடு மவாட்டத்திலுள்ள 313 பொதுசேவை இ-சேவைமையங்கள் மூலமாக தற்போது 20 வருவாய்த்துறை சான்றிதழ்கள் பட்டா மாறுதல் மற்றும சமூக நலத்துறை தொடர்பான சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன். இ -சேவை மையங்கள் மூலமாக வழங்கங்கப்படும் 20 வருவாய்த்துறை சான்றிதழ்களின் விவரம் பின்வருமாறு.

1. விவசாய வருமானசான்றிதழ்
2. வாரிசு சான்றிதழ்
3. குடிபெயர்வு சான்றிதழ்
4. சிறு குறு விவசாயி சான்றிதழ்
5. வசிப்பிட சான்றிதழ்
6. ஆண் குழந்தை இல்லை என்பதற்கான சான்றிதழ்
7. கலப்புதிருமண சான்றிதழ்
8. சொத்துமதிப்பு சான்றிதழ்
9. திருமணம் ஆகாதவர் என்பதற்கான சான்றிதழ்
10. விதவை சான்றிதழ்
11. அடகு வணிகர் உரிமம்
12. இயற்கை இடர்பாடுகளினால் இழந்த பள்ளி/கல்லூரி சான்றிதழ்களின் நகல் பெற சான்றிதழ்
13. வேலையில்லாதவர் என்பதற்கான சான்றிதழ்
14. கடன் கொடுப்போர் உரிமம்
15. இதரபிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் வகுப்பு சான்றிதழ்
16. வருமானவரி சான்றிதழ்
17. சாதி சான்றிதழ்
18. பிறப்பிட/இருப்பிட சான்றிதழ்
19. முதல்பட்டதாரி சான்றிதழ்
20. கைவிடப்பட்ட பெண் என்பதற்கான சான்றிதழ்.

மேற்கண்ட 20 சேவைகளையும் தற்போது பொதுமக்கள் தாங்களே இணையதளத்தில் விண்ணப்பிக்கும் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட 20 சான்றிதழ்களை பெறுவதற்கு பொதுமக்கள் https://www.tnesevai.tn.gov.in/Citizen/ என்ற இணையதள முகவரியை அணுகவும் மேலும் UMANG என்னும் ஆன்ராய்டு செயலி மூலமாகவும் பொது மக்கள் வருமானவரி சான்றிதழ், சாதி சான்றிதழ், பிறப்பிட/இருப்பிட சான்றிதழ் ஆகிய மூன்று சான்றிதழ்களையும் தங்கள் கைப்பேசி மூலமாக விண்ணப்பித்து பெறலாம் இதற்கான சேவை கட்டணமாக ரூ. 60-ஐ இணையதள வங்கிமுறை (Internet Banking) அல்லது கிரெடிட்/டெபிட் (credit /debit) அட்டைகள் மூலமாக செலுத்தலாம். இந்த புதிய வசதியைப் பயன்படுத்திக் கொண்டு தேவைப்படும் சான்றுகளை பெற்றுக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.பிரபாகர் இஆப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், ஈரோடு.